முருகப்பெருமான் துணை

**மகான் அகத்தியர் அருளிய துல்லிய ஆசி**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

05.07.2021, திங்கட்கிழமை

1. கலியுகம் காத்திடும் அரங்கஞானி
   கருணை பெருகி மக்களுக்கு
   அழியாமை பெற உண்டானதொரு
   அகத்திய முனி துல்லிய ஆசி
2. ஆசிதனை பிலவ மிதுனதிங்கள்
   அய்நான்கோர் திகதி சோமவாரம்
   (பிலவ வருடம் ஆனி மாதம் 21ம் நாள், 05.07.2021 திங்கட்கிழமை)
   ஆசிபட அரங்கன் வழி வருபவர்கள்
   ஆற்றல்பட வாழ உரைப்பேன்
3. உரைக்கவே அஞ்ஞானம் விலகி
   உண்மை வழி கண்டறியவேண்டி
   மறையாக அரங்கன் அருளும்
   மாதவ மார்க்கம் வந்தவர்கள் அனைவரும்
4. அனைவரும் அகத்தியன் வாக்காய்
   அரங்கன் திருவடி பற்றி தீட்சை
   இணையிலா ஏற்றுக் கொண்டு
   இதுநாள் முதல் செபதபம் காண
5. காணவே யாவர்க்கும் மாற்றம்
   கந்தவேலன் சக்தியாக அனுகி
   ஞானமும் சித்திக்கும் நன்மை கூடும்
   நம்பிக்கை பெருகி அகலா வண்ணம்
6. வண்ணமுடன் சன்மார்க்க வழியை
   வலுவாக ஏற்றுத் தொடர
   எண்ணம் வழி யானே கலந்து
   ஈடேற்றுவேன் அரங்கன் ஆசியாக
7. ஆகவே நடப்பின் உலகச் சூழல்
   அகன்று பாதுகாப்பாக மாற
   மகான்கள் காட்டும் தருமவழி
   மக்களே மனமுவந்து ஏற்றால்தான்
8. தானாக குருவருள் திருவருள்
   தக்க பாதுகாப்பாக இறங்கி
   ஞான பூமியாக மாற்றம் பெறும்
   நமனாக வந்த நச்சுக்கிருமி அல்லலும்
9. அல்லலும் வந்த சுவடு தெரியா
   அகன்றோடி சடுதி காப்பு பெருகும்
   வல்லமை தரும் ஒரே மார்க்கம்
   வாழ்வளிக்கும் கலியில் சிறந்த மார்க்கம்

10. மார்க்கம் அரங்கன் சன்மார்க்கம்
மக்களை தேற்றும் உயர்மார்க்கம்
மார்க்கமாக உலகோர் தொடர
மண்ணுலகம் வரவிருக்கும் சகலவித

11. சகலவித பேரிடரையும் வென்று
சர்வபாதுகாப்பும் மீட்பும் பெறும்
பகலவனாய் விளங்கும் மகா குருவே
பரமானந்த சதாசிவமே வாழ்க வாழ்க
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–